**O.S.No.32/2019**

வா.சா.1, திரு.பொன்னுமணி, த/பெ.ராமமூர்த்தி.
நாள் : 02.02.2023 நேரம் : 02.50 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்–**

**2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

இ.ம.எண்.187/2019 மூலமாக 1ம் பிரதிவாதியின் சார்பாக அதன் அலுவலக அதிகாரியை 7–ம் உத்தேச பிரதிவாதியாக சேர்க்க கோரி 01.08.2019 ஆம் தேதி மனுதாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்து என்பதால் 7ம் உத்தேச பிரதிவாதியால் மேற்படி மனு திரும்பப்பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

2) 2 முதல் 5 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களில் உள்ள கடைக்காரர்கள் அனைவரும் தனித்தனியாக முதுகுளத்தூர் மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.14/2017 முதல் 28/2017 வரையிலான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்குகள் பரமக்குடி சார்பு நீதிமன்றத்தில் இருந்து முதுகுளத்தூர் சார்பு நீதிமன்றம் புதியதாக தொடங்கியவுடன் மாற்றப்பட்ட வழக்குகள் என்று சொன்னால் சரிதான்.

3) மேற்படி வழக்குகள் தாக்கல் செய்த நாளிலிருந்து முடிந்த நாள்வரை உள்ள விவரங்கள் எங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி வழக்கு வாடகை வசூல் செய்யக்கூடாது என்றும் சட்டத்திற்கு புறம்பாக சொத்தில் இருந்து வெளியேற்றக்கூடாது என்றுதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. 2 முதல் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தின் உரிமையாளர் என்ற அடிப்படையில் தான் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

4) 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்து பாத்தியம் என்பதால் தான் நான் சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்குக்களில் இவ்வழக்கின் வாதிகளாகிய

நாங்கள் அவ்வழக்கின் தரப்பினராக சேர்க்க எந்தவிதமான நடவடிக்கைகளும்



எடுக்கவில்லை என்றால் சரியல்ல. சார்பு நீதிமன்றத்தில் மேற்படி வழக்குகள் நடைபெறுவது தெரிந்திருந்தும், தரப்பினராக சேராமல் இருப்பதற்கான காரணம் என்னவென்றால் 03.03.2015 அன்று 2 முதல் 5 பிரதிவாதிகள் கிரைய ஆவணங்கள் மூலமாக பதிவு செய்துள்ளார்கள். 19.03.2015 அன்று எங்களுடைய பிஷப் ஆபிரகாம்தாஸ் மாவட்ட பதிவாளரிடம் எங்களது சொத்து என்று கூறி மேற்படி கிரைய ஆவணத்தை ரத்து செய்ய மனு கொடுத்தோம். 10.07.2015 அன்று மாவட்ட பதிவாளர் 2 முதல் 5 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற கிரைய ஆவணங்கள் 164 முதல் 171 வரை செல்லாது என்று அறிவித்தார்கள். அதன் காரணமாக நான் மேற்படி சார்பு நீதிமன்ற வழக்கில் தரப்பினராக சேரவில்லை.

5) கேட்ட கேள்விக்கு நான் கூறியுள்ள காரணங்கள் மனு மூலம் மேற்படி வழக்கில் தரப்பினராக சேர்ந்து தெரிவிக்காததால் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள்தான் இராமநாதபுரம், மாவட்ட பதிவாளரால் 10.07.2015 ஆம் தேதி ரத்து செய்ததாக சொல்லப்படும் ஆவணங்கள் என்றால் சரிதான். மேற்படி இராமநாதபுரம் மாவட்ட பதிவாளரால் 10.07.2015 ஏற்பட்ட உத்தரவை ரத்து செய்வதற்காக இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி, இவ்வழக்கின் 1ம் வாதி, மாவட்ட பதிவாளர் ஆகியோர்களை எதிர்மனுதாரர்களாக சேர்த்து இவ்வழக்கின் 2 முதல் 6 மனுதாரர்களாக இருந்து மாண்புமிகு மதுரை, உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை தாக்கல் செய்து, 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு 09.01.2023 ஆம் தேதி சாதகமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், அதை எதிர்த்து நாங்கள் மாவட்ட பதிவாளரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளோம்.

6) உண்மையில் மேல்முறையீடு செய்திருந்தால் உச்ச நீதிமன்றத்தில்தான் செய்திருக்கவேண்டும் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக மாவட்ட

பதிவாளரிடம் மேல்முறையீடு செய்திருக்கிறேன் என்றாலும் சரியல்ல.



மாண்புமிகு உயர் நீதிமன்றததில் நடைபெற்ற வழக்கை இவ்வழக்கின் 1ம் வாதி வழக்கை எதிர்த்து நடத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் தாவா சொத்து 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதால்தான் 1ம் வாதி வழக்கை எதிர்த்து நடத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7) வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு சாதகமாக மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் உத்தரவு ஏற்பட்டுள்ளதாலும் தொடர்ந்து மேற்படி ஆவணங்கள் ஏற்பட்ட காலம் முதல் 2 முதல் 5 பிரதிவாதிகளின் ஊர்ஜிதத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்குகள் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணையை குறிப்பிட்டுதான் வழக்கின் முடிவு அமைந்தது என்று சொன்னால் சரியல்ல.

8) நீதிப்பேராணை 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு சாதகமாக முடிவடைந்ததால் வேறு யாருக்கோ, 1ம் பிரதிவாதிக்கோ மற்றும் இவ்வழக்கின் வாதிகளுக்கோ உரிமை ஏதும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 5 வரையுள்ள பிராது பாராக்களில் 1வது வாதியான Foundation எப்படி உருவாகியது என்ற விவரங்ளை குறிப்பிட்டுதான் பிராது தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். 1வது வாதியான Foundation ற்கும், வழக்கு சொத்திற்கும் எந்தவிதமான பாத்தியமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

9) தாவா சொத்துக்களின் சர்வே எண் குறிப்பிட்டு 1வது வாதியின் பெயரில் ஏதாவது பதிவு பெற்ற கிரைய ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.15 ஆவணங்களில் எந்த ஆவணம் 1வது வாதியின் பெயரில் உள்ள ஆவணம் என்றால் நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களில் இல்லை, ஆனால் நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்படாமல் உள்ளது.

10) நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்படாமல் உள்ள ஆவணங்களும், 1வது

வாதியின் பெயரில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1வது வாதியான



Foundation ற்கு அலுவலகம் ஏதும் முதுகுளத்தூரில் உள்ளதா என்றால் கிடையாது, நான்கு மாநிலங்களுக்கும் திருச்சிதான் தலைமையிடம். 1வது வாதியான Foundation ற்கு முதுகுளத்தூரில் வேறு சொத்துக்கள் இருக்கிறதா என்றால் இருக்கிறது. மேற்படி சொத்துக்களின் சர்வே எண்கள் மற்றும் கிராமங்களின் நிலை என்னவென்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

11) 1வது வாதியான Foundation ற்கு இம்மாவட்டத்திலேயே சொத்துக்கள் எதுவும் கிடையாது என்றாலும், வழக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. தாவா சொத்திலுள்ள கடைக்காரர்களுக்கு 2 முதல் 6 பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்டது என வாடகை கேட்டு தொந்தரவு செய்ததால்தான் கடைக்காரர்கள் சார்பு நீதிமன்றத்தில் 2 முதல் 6 பிரதிவாதிகள் மீது வழக்கு தொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

12) தாவா சொத்திலுள்ள கடைக்காரர்கள் மீது தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று நடவடிக்கை எடுத்ததற்கு ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை, வாடகை நாங்கள்தான் வசூலித்து வந்தோம். வாடகை வசூல் ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். தாவா சொத்திலுள்ள கடைக்களுக்குரிய மின் ரசீதோ, கடை வரிரசீதோ தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். மேற்படி வாடகை வசூல் ரசீதையோ, கடை வரிரசீதையோ ஏன் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் எங்கள் அனுபவத்தில் இருந்ததால் நான் தாக்கல் செய்யவேண்டிய அவசியமில்லை என்று நினைத்திருந்தோம்.

13) நான் இவ்வழக்கில் தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோராமல் அனுபவத்தை காட்டுவதற்குரிய எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யாததால் எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.10

இவ்வழக்கிற்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லாதது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணத்தில் வழக்கு சொத்து குறித்த ஆவணம் எதுவும்



இல்லை என்று சொன்னால் அது எங்கள் டிரஸ்டியின் Bylaw என்பதால் அதில் காட்ட வில்லை.

14) வா.சா.ஆ.9 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. தற்போது வா.சா.ஆ.9 குறிப்பிட்டுள்ளவாறு சர்வே எண்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 4 வரையிலான ஆவணங்களின்படி தாவா சொத்தின் மதிப்பு ரூபாய் ஒரு கோடியே அறுபது லட்சத்தி அறுபத்தி மூன்றாயிரம் என்றால் சரிதான். இவ்வழக்கு மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவேண்டிய வழக்கு என்றாலும், அரசிற்கு வருவாய் இழப்பீடு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளிர்கள் என்றாலும் சரியல்ல.

15) தாவா சொத்துக்களின் மதிப்பு கூடிவிட்டதால் தாவா சொத்துக்களுக்கு பாத்தியஸ்தர்களான 2 முதல் 6 பிரதிவாதிகளிடம் ஏதாவது பணத்தை வாங்கும் எண்ணத்தில் 2 முதல் 4 வாதிகளான நாங்கள் தாவா சொத்திற்கு சம்மந்தம் இல்லாத 1வது வாதியான Foundation –டம் வா.சா.ஆ.11 பொது அதிகார ஆவணத்தை எழுதி பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. பொது அதிகார ஆவணத்தில் கண்டுள்ளபடி தாவா சொத்துக்களை ஸ்தலத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

16) வழக்கு சொத்துக்களின் விவரங்கள் எதுவும் தெரியாமல் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களிலுள்ள சொத்துக்களை அவ்வாறே பார்த்து தட்டச்சு செய்து வா.சா.ஆ.11 ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.12 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் கொடைக்கானலில் உள்ள சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். ஏதாவது ஒரு ஆவணத்தை தாக்கல் செய்து பிரதிவாதிகளிடமிருந்து வழக்கு சொத்தை கைப்பற்றப்படவேண்டும் என்று வா.சா.ஆ.12 ஆவணத்தை தாக்கல்

செய்து்ள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 மற்றும் 14 ஆவணங்கள் கிராம நிர்வாக அலுவலர் வழங்கியதால் அதற்கு சாட்சிய மதிப்பு இல்லை என்று



சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.13 மற்றும் 14 ஆவணங்களுக்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.15 ஆவணம் 1ம் வாதிக்கு மாவட்ட பதிவாளரால் அனுப்பப்பட்ட அழைப்பாணை என்றால் சரிதான்.

17) வா.சா.ஆ.15 ஆவணத்தின் தொடர்ச்சியனா நடவடிக்கை மாண்புமிகு உயர் நீதிமன்றத்தின் மூலமாக ரத்து செய்யப்பட்டதால் வா.சா.ஆ.15 ஆவணத்திற்கு சாட்சிய மதிப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து 1வது வாதியான Foundation ற்கு பாத்தியப்பட்டது இல்லை என்று தெரிந்தே பொது அதிகாரம் எழுதி வாங்கி கொண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 2 முதல் 4 வாதிகள் பொது அதிகார முகவர் என்ற முறையில் தாவா சொத்துக்கள் சம்மந்தமாக வேறு வழக்குகள் எதுவும் சிவில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

18) 1வது பிரதிவாதி இவ்வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட நாளிலேயே எங்களுக்கு தெரியவந்து ரத்து செய்ய சொல்லி நடவடிக்கை எடுத்து வந்தோம். எனது வழக்கு காலவரம்பு சட்டத்தால் பாதிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சிறிய தொகை ஆன மவுண்ட்டை தாவா சொத்திற்கு செலுத்தி தாவா சொத்தை அபகரிக்க நினைக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யாதவரை எனது வழக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. பிராதிலும், முதல் விசாரணையிலும் கூறியுள்ள சங்கதிகள் அனைத்து உண்மைக்கு புறம்பானவை என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 04.00 P.M

சாட்சியின் கையொப்பம்.